(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 44.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, நவெம்பர் 09, செவ்வாய்க்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0119/ '10

1.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010, மார்ச் 31 வரை, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட சேலைனின்,

(i) தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) வகை யாது என்பதையும்,

(iii) இறக்குமதிச் செலவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த தினங்களில் சேலைன் தட்டுப்பாடு குறித்து பல்வேறு தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்ததோடு, அத்தகையதோர் நிலமை ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

(ii) அத்தகையதோர் நிலையினைத் தோற்றுவிப்பதில் எவரேனும் உத்தியோகத்தர் தொடர்புபட்டு இருப்பாராயின், அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0260/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பெலியத்த கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாடப்புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0273/ ’10

3.

கௌரவ ராஜீவ விஜேசிங்க, — பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) சர்வதேச நெருக்கடிகள் குழு என அழைக்கப்பபடும் ஓர் அமைப்பைப் பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வமைப்பு இலங்கையில் தற்போது தனது பிரதிநிதிகளைக் கொண்டுள்ளதா, அல்லது கடந்த பத்து வருடங்களில் இலங்கையில் இருந்தனரா என்பதையும், பிரதிநிதிகளைக் கொண்டிருந்தனரா என்பதையும்,

(ii) எவ் ஏற்பாடுகளின் கீழ் அது இலங்கையில் செயற்பட்டது என்பதையும்,

(iii) அதன் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு எவ்வாறு வீசா வழங்கப்பட்டது என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) (i) இவ் அமைப்பினால் இலங்கையில் வேலைக்கமர்த்தப்பட்ட இலங்கையர்களின் பெயர்களையும்,

(ii) அவர்களது கல்வி அல்லது ஏனைய தகைமைகளையும்,

(iii) சர்வதேச நெருக்கடிகள் குழுவினால் (ICG) அவர்கள் ஒவ்வொருக்கும் செலுத்தப்பட்ட தொகையையும், செலுத்தப்பட்ட அடிப்படையயும்

அவர் அறிவிப்பாரா?

(ஈ) (i) அவ் அமைப்பு அல்லது அதன் ஊழியர்கள் எவராவது இலங்கைக்கு வரி செலுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களா என்பதையும்,

(ii) ஆம் எனில், அக்கடப்பாட்டை நிறைவேற்றியுள்ளனரா என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0293/ ‘10

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2006 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதற்கமைய, 9 மீற்றர் நீளமான 21000 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 3400 மரத்ததூண்களும் கொள்வனவு செய்வதற்காக விலை கோரப்பட்டது என்பதையும்,

(ii) குறைந்தபட்ச விலைகளைச் சமர்ப்பித்த அரச மரக் கூட்டுத்தாபனத்தின் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும்,

(iii) இரண்டாவதாக குறைந்தபட்ச விலைகளை சமர்ப்பித்த தென்னாபிரிக்க நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரம் அளிக்கப்பட்டதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) எவ்வாறாயினும், 9 மீற்றர் நீளமான 10500 மரத்தூண்களும் 10 மீற்றர் நீளமான 1700 மரத்தூண்களும் கொள்வனவு செய்யப்பட்டதென்பதையும்,

(ii) இதில் தென் மாகாணத்திற்கு விநியோகிக்கப்பட்ட 2363 தூண்களில் 73 தூண்கள் மட்டுமே பாவனைக்கு எடுக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்கூறிய கேள்விப் பத்திரத்தை அளிக்காமையினால் ரூபா 79.5 மில்லியன் நட்டம் ஏற்பட்டதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அந்த நட்டம் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களின் பெயர்கள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0366/ '10

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலக சுகாதார அமைப்பின் தரங்களுக்கு அமைய மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்பட வேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(ii) சுகாதார அமைச்சு ஏற்றுக்கொள்கின்ற தரங்களுக்கு அமைய இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையில் காணப்படவேண்டிய குறைந்தமட்ட விகிதாசாரம் யாது என்பதையும்,

(iii) தற்போது, இலங்கையில் மருத்துவர்களுக்கும் மக்களுக்கும் இடையிலான விகிதாசாரம் எவ்வளவு என்பதையும்,

(iv) மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(v) மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரியும் மருத்துவர்களின் எண்ணிக்கை வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கைப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மருத்துவர்களை அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பதை நிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0411/ '10

6.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கண்டி ஹந்தான தோட்டத்திலிருந்து 45 ஏக்கர் 02 ரூட் 16 பர்சஸ் நிலப் பரப்பினை சட்டபூர்வமற்ற காணிப் பரிமாற்றமொன்றாக ஷhமினி கிரிஎல்ல மற்றும் பிலிப் ஜயவர்த்தன என்பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இக் காணியானது சட்ட ரீதியாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் மட்டுமே வழங்கப்படமுடியுமெனினும், இந்த நடவடிக்கை முறையைப் பின்பற்றாது முன்னாள் அமைச்சரும், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தலைவரும் மேற்படி காணியை சட்டரீதியற்ற வகையில் வழங்கியுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) சட்ட ரீதியாக வழங்கப்படவில்லையெனின், இக்காணியை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மீள சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) சட்டரீதியற்ற இக்காணிக் கொடுக்கல் வாங்கலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியது யார் என்பதையும்,

(iii) இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0431/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக பதவி ஏற்றதில் இருந்து, அவர் எத்தனை தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டுள்ளார் என்பதையும்,

(ii) விஜயம் செய்த நாட்டின் பெயர், விஜயத்துக்கான காரணம், அமைச்சருக்கான செலவு, கூடச்சென்றவர்களின் பெயர்கள், ஒவ்வொரு விஜயத்திலும் அவர்களால் ஏற்பட்ட செலவு ஆகிவற்றைத் தனித்தனியாகவும்,

(iii) இவ்வொவ்வொரு விஜயத்தினாலும் நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 5 வருடங்களில், தற்போதைய அமைச்சருக்கு முன்பு அமைச்சராக இருந்தவர்கள் அதே நாட்டிற்கு எத்தனை தடவைகள் விஜயம் செய்தனர் என்பதையும்,

(ii) அவர்கள் செலவிட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0556/ '10

8.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2009.02.20 ஆம் திகதி பயங்கரவாத விமானத் தாக்குதலால் சேதமான உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கான அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பணம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அந்தக் கட்டடத்தில் திருத்தப்பணிகளை மேற்கொண்ட தனியார் ஒப்பந்தக்காரர் களின் பெயர்கள், ஒப்பந்தப் பெறுமதி மற்றும் செலுத்தப்பட்டுள்ள தொகை யாவை என்பதையும்,

(ii) கட்டடத்தின் ஒரு சதுர அடிக்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்,

(iii) திருத்தத்துடன் தொடர்புடைய அனைத்து பணத் தொகையும் செலுத்தித் தீர்க்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) திருத்தப்பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட்ட போது முறையான கேள்விப்பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், அது தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(ii) மேற்படி பணிகளை நிறைவுசெய்ய உடன்பட்டுக் கொண்டுள்ள காலம் எவ்வளவென்பதையும்,

(iii) தற்போது கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) கட்டடத்தின் புனர்நிர்மாணப் பணிகளின் நிலைமை தொடர்பாக நிபுணத்துவ அறிக்கையொன்று பெறப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0261/ '10

9\.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்திற் குட்பட்ட வலஸ்முல்ல கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0387/ '10

10\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த ஆறு வருட காலப் பகுதியிலில் ஆஸ்பத்திரிகளிலிருந்த அகற்றப்பட்ட தரத்தில் குறைந்த மருந்து வகைகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வாறு அகற்றப்பட்ட மருந்து வகைகளின் பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) இந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதி யாரால் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) இந்த மருந்து வகைகளை அழிப்பதற்கு அரசாங்கத்தினால் பணம் செலவிடப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) ஆமெனில், அத்தொகை எவ்வளவென்பதையும்,

(vi) தரத்தில் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்ததன் மூலம் ஒட்டுமொத்தமாக அரசுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0432/ ’10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு நாட்டின் பணவீக்கத்தைக் கணிப்பிடும் அதிகாரசபை எதுவென்பதையும்,

(ii) இலங்கையில் கடந்த 15 வருடங்களில் வருடம் ஒன்றிற்கான பணவீக்க வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) ஒவ்வொரு வருடத்தின் பணவீக்கத்திற்காகவும் ஏற்பாடு செய்த பின்னர், 1995 இல் இருந்த ரூபா 1,000 இன் இன்றைய உண்மைப் பெறுமானம் எவ்வளவு என்பதையும் (1995 இல் இருந்த ரூபா. 1000.00 இன் இன்றைய கொள்வனவுச் சக்தி)

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) நாட்டின் பொருளாதாரத்திற்கு பொறுப்பற்ற வழிகாட்டுதல்களை வழங்கப் பொறுப்பாகவிருந்த ஆட்களின் பெயர்களை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இந்தியா, பாக்கிஸ்தான், மாலைதீவு, பூட்டான், நேபாளம், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற நாடுகளின் கடந்த 5 ஆண்டுகளுக்கான பணவீக்கம் எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், என்?

0557/ ’10

12.

கௌரவ அஜித் குமார,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பயங்கரவாத விமானத் தாக்குதலினால் சேதமடைந்த உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டடத்தை திருத்தி முடிக்கும் வரை, திணைக்களப் பிரிவுகளை நிறுவும் பொருட்டு வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த கட்டட உரிமையாளர்களின் பெயர்களும் முகவரிகளும் யாவையென்பதையும்,

(iii) ஒவ்வொரு வாடகைக் கட்டடத்திற்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iv) அவற்றின் வாடகை கால எல்லை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பிரிவுகள் தொடர்ந்தும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அதற்கான காரணம் என்னவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0262/ ‘10

13.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்திற் குட்பட்ட கட்டுவன கோட்டக் கல்வி அலுவலகத்தினால் நிர்வகிப்படும் அரசாங்க பாடசாலைகளில் கல்வி பெறும் மாணவர்களின் பரீட்சையில் சித்தியடையும் சதவீதம் குறைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கல்வி வலயத்தில் 2007, 2008,2009 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர் தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழக கல்வியைப் பெறுவதற்கு தகுதி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பாடசாலைகளின் பெயர்களையும் தனித்தனியாக அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) வருட ஆரம்பத்தில் பாட புத்தகங்களும் ஆசிரியர்களுக்கான பாட விதானங்களும் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாமை மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சியடைவதற்கு காரணமாயுள்ளதென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அம்மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கும் ஆற்றல்களை வளர்ப்பதற்கும் தேவையான பாட புத்தகங்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பாடசாலைகளை உரிய முறையில் கண்காணிப்பதற்காக உரிய உத்தியோத்தர்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனின், அதற்காக மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0433/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வட கிழக்கு மாகாணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள சமய நிறுவனங்களின் இன்றுள்ளவாறான எண்ணிக்கையையும்,

(ii) அவற்றின் பெயர், முகவரிகளையும்,

(iii) இவற்றுள் மிகவும், முக்கியமான, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 20 சமய நிறுவனங்களின் பெயர்களையும்,

(iv) அரசாங்கத்தினால் அத்தகைய சமய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையையும்,

(v) அத்தகைய நிறுவனங்களில் உள்ள மதப் பெரியார்களின் பெயர்களை மத அடிப்படையிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

0558/ '10

15.

கௌரவ அஜித் குமார,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐபா விருது வழங்கும் விழாவுக்காக சுகததாச உள்ளக விளையாட்டரங்கு நவீனமயமாக்கப்பட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறு நவீனமயமாக்கும்போது விளையாட்டரங்கில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பற்றிய முழு விபரங்கள் யாவையென்பதையும்,

(ii) இந்த நவீனமயமாக்கல் பணிகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்,

(iv) இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(v) அந்நிதியீட்டினை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுகததாச உள்ளக விளையாட்டரங்கினுள்,

(i) நவீனமயமாக்கலுக்கு முன்னர் இருக்கைகளைப் பெறக்கூடியதாகவிருந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) நவீனமயமாக்கலுக்குப் பின்னர் இருக்கைகளைப் பெறக்கூடியதாயுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ நீதி அமைச்சர்,— தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் (திருத்தம்),— 1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

2.

கௌரவ நீதி அமைச்சர்,— மத்தியஸ்த சபைகள் (திருத்தம்),— 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க, மத்தியஸ்த சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்ஸா,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“ஜோன் செனவிரத்ன மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2010, நவெம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

திரைசேரிச் செயலாளர் (பிரதிநிதியின் பெயர் குறித்த நியமனம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

சூதாட்டம் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

இலங்கைப் பகிரங்க தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத் தொடர்பு இயக்குனர்கள் அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூலை மாதம் 12 ஆம் திகதிய 1662/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, யூன் மாதம் 17 ஆம் திகதிய 1658/31 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, ஓகத்து மாதம் 09 ஆம் திகதிய 1666/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுத் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2010, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1670/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, ஓகத்து மாதம் 30 ஆம் திகதிய 1669/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் கைத்தொழில், வாணிப அமைச்சரால் ஆக்கப்பட்டு 2010, யூலை மாதம் 09 ஆம் திகதிய 1661/36 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 14.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 15.

ஒதுக்கீடுச் சட்டமூலம் (2011) — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— நில அளவைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 41 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 65 ஆம் பிரிவின் கீழ், காணி அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு 2005 நவம்பர் மாதம் 23ஆம் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "நில அளவைச் சபை—2005 (வருடாந்த தொழில் புரியும் உத்தரவுப்பத்திரங்கள்)" பிரமாணங்களின் 3 ஆம் பந்தியை திருத்துவதற்காக 2009, திசெம்பர் மாதம் 18 ஆம் திகதிய 1633 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2010.10.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8ஆம் பிரிவினால், நிதி, திட்டமிடல் அமைச்சருக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.27 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 27

2008 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 21302 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "அச்சிடல், பிரசாரம் மற்றும் புத்தகங்கள் விற்பனை முற்பணக் கணக்கு—கல்வி வெளியீட்டுத் திணைக்களம்" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 2,400,000,000 இலிருந்து ரூபா 2,162,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 100,000,000 இலிருந்து ரூபா 960,000,000 வரை.

(இக்கட்டளை 2009.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : கலாநிதி சரத் அமுனுகம*
பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.

கொழும்பு 01,
2010.07.03

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 21.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 22.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 23.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 24.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 25.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40 (3) ஆம் பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* 26.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.